மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# சங்க இலக்கியத்தில் குறிஞ்சி மலர் — ஓர் அறிவியல் பார்வை

முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்
பேராசிரியர், தமிழ்த்துறை
கேரளப்பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம்

**முன்னுரை**

சங்க இலக்கியம் பழந்தமிழர் வாழ்வையும் அவர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த வாழ்க்கை முறையினையும் எடுத்துரைக்கும் காலக்கண்ணாடியாகவும் அழியாச்சான்றாகவும் விளங்கி வருகிறது. பழந்தமிழர் வாழ்வில் இடம்பெற்ற காதல், மறம், புகழ் ஆகிய மூன்றும் ஆராயப்பட்ட அளவிற்கு இயற்கை ஆராயப்படவில்லை. இயற்கை, அறிவியல் நோக்கில் ஆராயப்பட வேண்டும். சங்க இலக்கியத்தில் தாவரங்கள் பெறுமிடம் பற்றி ஆராய்ந்த பி.எல்.சாமி, "சங்க இலக்கியத்தில் செடி கொடி மரங்கள்" பற்றிப் பல செய்திகள் கூறப்படுகின்றன அவை பெரும்பாலும் செடி நூலார் கண்டவையோடு ஒத்திருகின்றன என்று கூறுகின்றார். மலைகளிலே பல்வேறு வகையான மலர்கள் காணப்பட்டாலும் குறிஞ்சி என்ற பூவின் தனிச்சிறப்பினால், மறைநிலததிற்கு சங்க கால மக்கள் குறிஞ்சி நிலம் என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். குறிஞ்சி ஒழுக்கம், குறிஞ்சிப்பண், குறிஞ்சி யாழ், குறிஞ்சிப்பாடி, குறிஞ்சிப்பாட்டு போன்ற சொல்லாட்சிகளையும் காண்கிறோம். குறிஞ்சி கடல் மட்டத்திலிருந்து ஆறாயிரம் அடிக்கு மேல் மலைப்பகுதியில் இரண்டு அடி முதல் மூன்று அடி உயரம் வரை (60 முதல் 100 செ.மீ.) பல்லாண்டு வளரும் புதர்ச்செடியாகும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மட்டுமே பூக்கும். 2006 ஆம் ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் குறிஞ்சி மலர் மேற்குத்தொடர்ச்சி மலையில் குறிப்பாக மூணார், கொடைக்கானல், பழனிமலை, போன்ற இடங்களில் பூத்துக்குலுங்கியது. உலகில் மேற்குத்தொடர்ச்சி மலையிலும் ஈழத்திலும் பர்மாவிலும் மத்தியப்பிரதேசத்தின் சில பகுதிகளில் மட்டுமே குறிஞ்சி வளர்வதாக தாவரவியலார் குறிப்பிடுகின்றனர். 2006 – இல் கேரள அரசு, குறிஞ்சிச் செடிகளை அழிவில் இருந்து பாதுகாப்பதற்காக, கேரளத்தில் இச்செடிகள் காணும் இடங்களை ஒன்றிணைத்து, குறிஞ்சி மலைப்பூங்கா என்ற தேசியப்பூங்காவாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் சங்க இலக்கியத்தில் காண்ப்படும் குறிஞ்சி பற்றிய செய்திகளைத் தாவரவியல் உண்மைகளோடு ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிஞ்சிச்செடி (STROBILANTES)**

தாவரக்குடும்பம் – அக்காந்தேசியே

பேரினம் – ஸ்ட்ரோபிலான்தெஸ் பிலாப்பில்லம்

சிற்றினம் – குந்தியானம்

ஸ்ட்ரொபிலாந்தெஸ் என்னும் இப்பேரினத்தில் இதுவரை 192 சிற்றினங்கள் கூறப்பட்டுள்ளன. இதில் ஆசியாவில் பதினெட்டும், இந்தியாவில் 154–ம் ஆப்பிரிக்காவில் 1–ம் (HOOKER VOL. 4-408,479) தமிழ்நாட்டில் (GAMBIE II/, 73) உள்ளன. குறிஞ்சிச்செடியில் 28 இனங்கள் ஈழத்தில் காணப்படுகின்றன. பர்மாவிலும் அஸ்ஸாமிலும் காணப்பட்டாலும் அவை கேரளப் பகுதிகளல் மட்டுமே சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன என்று தாவரவியலார் கருதுகின்றனர். லுஷிங்டன் தாவரத் தமிழ்ப்பெயர்ப் பட்டியல் ஸ்ட்ரொபிலாந்தெஸ் கன்சாகுனேயஸ் என்பதைப் பெருங்குறிஞ்சி என்றும் ஸ்ட்ரொபிலாந்தஸ் சீலியேட்டஸ் என்பதைச் சிறு குறிஞ்சி எனவும் ஸ்ட்ரொபிலாந்தஸ் என்பதைக் குறிஞ்சி எனவும் விளக்கியுள்ளது. நீல மலையிலும், கொடைக்கானலிலும். பழனி மலையிலும் வளரும் ஸ்ட்ரொபிலாந்தஸ் பேரினத்தில் 19 இனங்கள் நான்கு முதல் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூத்து அழியும் இயல்பின. ஸ்ட்ரொபிலாந்தெஸ் குந்தியானம் என்ற நீலக்குறிஞ்சி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூத்ததென்பதை (JNB, His, Soc, 38 (1935) 117–122 என்ற ஆய்வு இதழ் கூறுகிறது. அதாவது 1838 ஆம் ஆண்டு தொடங்கி 1934 – ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து ஒன்பது முறை பூத்ததாகக் குறிப்பிடுகிறது.

**இலக்கியத்தில் குறிஞ்சி**

குறிஞ்சி என்ற சொல் சங்கத்தொகை நூல்களில் 19 இடங்களில் ஆளப்பெற்றிருந்தாலும் இவற்றில் 7 இடங்களில் மட்டுமே குறிஞ்சி மலர் பற்றிய குறிப்பு இடம் பெறுவதாக இல. குளோரியா சுந்தரமதி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**குறிஞ்சித்தேன்**

மலைத்தலைவனது நாட்டைச் சிறப்பித்துக்கூறும் தலைவி.

கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு

பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே, (குறு.3)

என்கிறாள். குறிஞ்சிப்பூவின் தேனை மிகவும் அரியதாகக் கருதியதை இப்பாடல் வரிகள் சுட்டுகின்றன. குறிஞ்சித்தேன் பிற தேனைவிடச் சிறப்புடையது. பல்லாயிரக்கணக்கில் பூப்பதால் தேனீக்கள் நிறையத் தேனைத் தொடுக்க வாய்ப்புண்டாகிறது. பொதுவாகத் தேன் கூடுகளில் பலவகைப் பூக்களின் தேன் காணப்படும். ஆனால் குறிஞ்சிப்பூக்களின் தேனால் இழைக்கப்படும் கூட்டில் பிற பூக்களின் தேன் கலப்பதில்லை. ஏனெனில் குறிஞ்சிச்செடி பூக்க ஆரம்பித்தால் தேனீக்கள் குறிஞ்சித்தேனையே கூடுகளில் சேர்க்கின்றன. இத்தகைய தேனைத் தாவரவியல் அறிஞர்கள் தனிப்பூத்தேன் (Unifloral Honey) என்று கூறுகின்றனர். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூப்பதால் இதன் மலரில் சுரக்கும் தேன் சுரப்பிகள் வழியாக வெளிப்படுவது இனிதாக இருப்பதில் வியப்பில்லை.

**மதனில் வான் பூ**

குறிஞ்சியின் தண்டு கருமையுடையதாகவும் வலிமையுடையதாகவும் காணப்படும் என்பதைச் சங்கப்புலவர்கள் கூறியுள்ளனர். பல்லாண்டுகள் வளர்ந்து முற்றுதலின் குறிஞ்சியின் தண்டு வலிமையுடையதாக இருக்கும் என்று தாவரவியலாரும் கூறுவர். ஆனால் நற்றிணைப்பாடல் ஒன்றில்,

கருங்காற் குறிஞ்சி மதனில் வான் பூ (நற் – 268)

என்று பயின்று வந்துள்ளது. இத்தொடரில் மதனில் வான் பூ என்ற தொடருக்கு வலிமையில்லாத வெளிய பூ என்று உரை கூறுவர். அதாவது கருங்கோல் குறிஞ்சி மதன் (வலிமை) இல் – வான் (வெண்மை) பூ என்ற பொருளில் பாடல் அமைந்துள்ளது. 1958 ஆம் ஆண்டில் தொட்டபெட்டா மலைச்சிகரத்தில் 8000 அடிகளுக்கு மேல் ஸ்ட்ரொபிலாந்தஸ் கஸ்பிடேட்டஸ் (strobilanthes Cusidatus) என்ற பூ பூத்திருந்ததாகவும் வெண்மை கலந்த நீலமான இப்பூ குறிஞ்சிப்பூவன்று குறிஞ்சி இனத்தில் பட்ட வேறொரு வகைப்பூவென்று தாவரவியலார் கூறுவதாகவும் சீனிவாசன் கூறுகின்றார். ஒருக்கால் இதனையே “கருங்கோற் குறிஞ்சி மதனில் வான் பூ” என்று நற்றிணை 268 ஆம் பாடலில் காமக்கண்ணியார் கூறியிருக்கலாம்.

**புணர்ச்சிப்பொருள் கொண்ட பூ**

குறிஞ்சி பூத்த ஆண்டில் மலை முழுதும் குறிஞ்சிப்பூக்கள் மட்டுமே காணப்படும். அடுக்கடுக்காகக் காணப்படும் குறிஞ்சிப்பூவை உவமையாக வைத்துச் சங்கப்புலவர்கள் குறிஞ்சிப்பண் பாடினர். இது அடுக்கம் பாடல் எனப்பட்டது. குறிஞ்சியைக் கூட்டம்கூட்டமாகப் பார்த்ததால்தான்

கருங்கோற் குறிஞ்சி அடுக்கம் பாட (புறம்.374)

என்று கூறினர். ஸ்ட்ரொபிலாந்தஸ் வாச்சி (Strobilanthes Walliechi) என்ற குறிஞ்சி வகை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலருமாம். அது விளையும்போது பிற செடிகளை வளரவிடாது அழித்துவிடுமாம். மலைலச்சாரலில் குறிஞ்சிச் செடிகளைத்தவிர பிற செடிகளைக் காண முடியாது என்று தாவரவியலார் கூறுவர்.

குறிஞ்சி புணர்ச்சிப்பொருள் கொண்ட பூ. கூடிப்புணர்வோர் புணரும் இடத்தில் மற்றவருக்கு இடம் தருவாரா என்ன? அதுபோன்றே இச்செடி பூக்கும்போது வேறெந்தச் செடி வகையும் இவ்விடத்தில் முளை காட்ட முடியாது. ஒன்றும் முளைப்பதில்லை என்ற கோவை இளஞ்சேரனாரின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**கார் மலர்க் குறிஞ்சி**

குறிஞ்சிப் பூவைக் கார்காலத்தில் மலரும் பூவாக மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது.

கார் மலர்க் குறிஞ்சி (மதுரைக் காஞ்சி 613)

12 ஆண்டுகட்கு ஒருமுறை மலர்ந்தாலும் கார்காலமாகிய ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களிலேயே இம்மலர் மலர்ந்துள்ளது. நான்கு முறை கார்காலத்தில மலர்ந்ததைப் பார்த்தாக பைசன் குறிபிடுகிறார். 2006 ஆம் ஆண்டும் கார்காலமாகிய ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களிலேயே இம்மலர் மலந்திருந்தது.

குறிஞ்சி மலரை ஒத்த மேனியள் என்று நற்றிணைப் பாடலொன்று அன்றலர்ந்த குறிஞ்சிப்பூவின் நிறத்தினைத் தலைவியின் மேனியுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றது.

குறிஞ்சி நாள் மலர் புரையும் மேனி (நற்.301)

தலைவி அன்றலர்ந்த குறிஞ்சிப்பூவின் நிறத்தினை ஒத்த மேனியள் என்று உரை விளக்கம் தருவர். குறிஞ்சி மலர் பூத்த பின்னர் அவ்வாறே பல நாட்கள் வாடாதிருக்கும் இயல்பைப் பெற்றது எனினும் அன்றலர்ந்த குறிஞ்சி மலரை ஒத்தவள் என்பது ஒப்புமையாகும்.

**குறிஞ்சி இராகம்**

குறிஞ்சிப்பூவின் பெயரைப் பெற்று குறிஞ்சித்திணை உருவானது. குறிஞ்சித்திணையில் குறிஞ்சிப்பண் தோன்றியது. இரவில் காவல் புரிவோர் தாம் காவலுக்கு இருப்பதை அறிவிக்கவும் தூக்கத்திற்கு ஆட்படாதிருக்கவும் குறிஞ்சிப்பண் பாடினதாக நற்றிணை குறிப்பிடுகின்றது.

உருகெழு மரபின் குறிஞ்சி பாடி
கடியுடை வியல் நகர்க் கானவர் துஞ்சார் (நற்–255)

குறிஞ்சிப்பூ கொய்யப்படும் மலர். கொய்யும் குறிஞ்சி என்றால் பூவைக் குறிக்கும். குறிஞ்சிப்பண் என்னும் இசை கொய்யப்படாது இசைக்கப்படுவதால் இதனை

கொய்யாக் குறிஞ்சி பலபாடி (திரு.முரு.படை 289)

என்று குறிஞ்சி இசையினைக் குறிப்பிடுகின்றது. இக்குறிஞ்சிப்பண் பாடல்களே இன்று மேகராகக் குறிஞ்சி, பொன் வண்ணக்குறிஞ்சி, நீலாம்பரி போன்ற இராகங்களாக மாற்றடைந்திருக்கலாம். மேகராகக் குறிஞ்சி என்பது ஓர் இராகம். இது மேகம் போன்ற குறிஞ்சிப்பூவின் நிறத்தால் பெயர் பெற்றது. பொன் வண்ணக் குறிஞ்சி என்றது மஞ்சள் வண்ணக் குறிஞ்சிப்பூவைக் குறித்திருக்கலாம் என்று கூறுகிறார் சீனிவாசன். நீலாம்பரி இராகம் நீலக்குறிஞ்சியுடன் ஒப்பிடத்தக்கது.

**கடவுள் வழிபாடு**

குரவர் குறிஞ்சிப்பூவைச்சூடி கைகோர்த்து நின்று குரவை ஆடுவர். கார்கால மலரை விரும்பிச் சூடுவர் என்றும் மலைத்தெய்வமாகிய முருகன் குறிஞ்சி சூடி விளங்குவான் அவனுக்கு குறிஞ்சி சூட்டி வணங்குவர். முருக வெறி ஏறி வேலன் குறிஞ்சி சூடி ஆடுவான் என்றும் பல சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

வெரியர் எல்வின் என்ற மானிடவியல் அறிஞர் சூடாநாகபுரியில் வாழும் பைகர் என்னும் மலையினத்தார் இக்குறிஞ்சியைத் தலையிலும் இடுப்பிலும் செருகிக்கொண்டு ஆடுவர் என்றும் குறிஞ்சி பூத்த ஆண்டில் தேனீ விழாக் கொண்டாடுவர் என்றும் இவர்களது வாழ்க்கை முறைகள் தென் தமிழகத்தில் வாழும் தோதுவர் என்னும் மலைவாழ் மக்களோடு ஒத்துள்ளன என்றும் குறிப்பிடுகின்றார். இவர்களுக்கும் சங்க காலத்திலிருந்த தேனையும் குறிஞ்சியையும் போற்றும் திராவிடர்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டும்.

குறிஞ்சி பூத்த ஆண்டில் மலைநாட்டு மக்கள் தம் நல்வாழ்வு குறித்து யாராலும் ஒரு திசையில் ஊர்ப்புறம் சென்று காட்டைக்காவலர் என்னும் சிறுதெய்வத்திற்கு வழிபாடு செய்வர் என்றும் அங்ஙனம் செய்யாவழி தமது நாடு, கன்று முதலியன இறந்தொழிவதுடன் பயிர் விளைவு குன்றும் கொடைக்கானலின் பாங்குறையும் மக்கள் கூறுவதாக எஸ்.சீத்தராமையா (indian antiquity Vol, XI 911-68) எழுதியுள்ளார். இக்கருத்தும் சங்கப்பாடல்களோடு ஒப்புநோக்கது.

**முடிவுரை**

சங்க இலக்கியம் ஒரு கடல், கற்பவருக்கு பல்துறை அறிவு இருந்தாலன்றிச் சங்க இலக்கியத்தின் முழுப்பொருளையும் அறிதல் சற்றுக் கடினமே, கருங்கோற் குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடன் என்ற குறுந்தொகைபாடலை விளங்கிகொள்வதற்கே சில துறை அறிவுகள் வேண்டும். அறிவியல் ஆய்வு முறையில் ஆய்ந்து பொருளை வெளிக்கொணர்ந்தால், செம்மொழியின் செவ்வியல் இலக்கியங்களை உலகு உயர்ந்து பாராட்டும்.